இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 349 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 14 – வியாழக்கிழமை 30 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 349 : Thiruvalluvar Year - 2057 - Aadi 14 - Thursday 30 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## உச்ச நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்கள் வாய் பொத்தி நிற்பதா?

# 151 உயர் சிறப்பு அரசு மருத்துவர் இடங்கள் இழப்பு!

## த.வெ.க. அரசுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஜூலை 30 -**

**“உச்சநீதிமன்றத்தில் அரசின் மூத்த வழக்கறிஞர்கள் வாய் பொத்தி நின்றதால் 151 உயர் சிறப்பு அரசு மருத்துவர் இடங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் ‘சூப்பர் ஸ்பெ ஷாலிட்டி’ மருத்துவப் படிப்புகளுக்கான, 2025 - 2026ம் கல்வியாண்டு கலந்தாய்வில், அரசுப்பணியில் உள்ள டாக்டர்களுக்கான மாநில ஒதுக்கீட்டு இடங்கள் சில நிரப்பப்படாமல் காலியாக இருந்தன.

இந்த இடங்களை அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு திருப்பி அளிக்கக்கோரி தமிழ்வாணி உள்ளிட்ட மருத்துவ மாணவர்கள் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, ஆலோக் ஆராதே அடங்கிய அமர்வு கடந்த மே 29ந் தேதி விசாரித்தது,

தமிழகத்தில் காலியாக உள்ள 151 மருத்துவ இடங்களை, அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு



உத்தரவிட்டது.

இதற்கிடையே இந்த உத்தரவை செயல்படுத்தாமல் நிறுத்தி வைக்க தேசிய மெடிக்கல் கவுன்சில், தமிழ்நாடு அரசு, தேர்வு கமிட்டி, மெடிக்கல் கவுன்சில் கமிட்டி ஆகியவற்றுக்கு உத்தரவிடவும், 151 “மருத்துவ இடங்களில் மூன்றாவது கவுன்சிலிங் சுற்றின்போது சேர தமிழ்நாடு அரசு டாக்டர்களுக்கு அனுமதி அளிக்க உத்தரவிடக்கோரியும் தமிழ்நாடு மெடிக்கல் ஆபீசர்ஸ் அசோசியேஷன் சார்பில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ‘இந்த விவகாரத்துக்கு தீர்வு காண்போம். உச்சநீதிமன்றம் முந்தைய ஆண்டுகளில் பிறப்பித்த உத்தரவையே நடப்பாண்டிலும் பிறப்பிப்போம் என்று குறிப்பிட்டதுடன், காலியாக உள்ள ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ 151 மருத்துவ இடங்களை, அகில இந்திய ஒதுக்கீடுக்கு இன்றைக்குள் ஒப்படைக்க தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டனர்.

### த.வெ.க. அரசு சரியாக வாதாடவில்லை!

தமிழ்நாட்டில் 151 மருத்துவ இடங்கள் குறித்த வழக்கில், மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் சிங்வி மற்றும் பிரசாந்த் சென் ஆகியோர் தமிழ்நாடு அரசின் சார்பில் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் தமிழ்நாடு அரசுக்கு எதிராகத் தொடரப்பட்ட இவ்வழக்கில் இவர்கள் ஆஜராகவில்லை. இதனால் அரசு மருத்துவர்களுக்கான தொகுப்பில் இருந்து 151 இடங்களைச் சரண்டர் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**ஆறாண்டுகளுக்கு முன் இதே நாளில், இந்தியா முழுவதும் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27% இடஒதுக்கீட்டைத் தி.மு.க. போராடிப் பெற்றுத் தந்தது. ஆனால் இன்றோ, மருத்துவப் படிப்பில் தமிழ்நாட்டின் இடங்களை இழக்கும் செய்தி வந்திருக்கிறது.**

**தமிழ்நாட்டின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி இடங்களைக் காற்றில் பறக்க விட்ட த.வெ.க. அரசு; உச்சநீதிமன்றத்தில் வாய்பொத்தி நின்ற தமிழ்நாடு அரசு வழக்கறிஞர்கள்.**

**தமிழ்நாடு அரசு நியமித்த மூத்த வழக்கறிஞர்கள் ஏன் ஆஜராகவில்லை?**

**மிகுந்த முக்கியத்துவம் கொண்ட இந்த வழக்கில் தொடக்கம் முதல் அலட்சியம் ஏன்? மூத்த வழக்கறிஞரை நியமிப்பதில் கூட ஏன் தாமதம்?**

**நியாயம் நம் பக்கம் இருந்தும் நீதிமன்றத்தில் எந்த வலுவான வாதங்களையும் எடுத்து வைக்காமல் ‘சரண்டர்’ ஆனதன் பின்னணி என்ன?**

**அகில இந்திய கவுன்சிலிங்கின் இரண்டாம் சுற்று நடைபெறுவதற்கு முன்னரே, மாநிலக் கலந்தாய்வை அவசரமாக நடத்தி 151 இடங்கள் காலியாக உள்ளதாக அறிவித்தது திட்டமிட்டே செய்யப்பட்டதா?**

**தமிழ்நாட்டுக்கான சூப்பர் ஸ்பெஷாலிட்டி இடங்கள் அகில இந்தியத் தொகுப்புக்கு மாற்றப்படுவதை எதிர்த்து, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தியும் செய்யாதது ஏன்?**

**2025 - 2026 உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மறுசீராய்வு மனு என்ன ஆனது?**

**இப்படி பல கேள்விகளை இதனால் பாதிக்கப்பட்டுள்ள அரசு மருத்துவர்கள் எழுப்புகிறார்கள்.**

**எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் தொண்டாற்ற இருந்த 151 உயர் சிறப்பு அரசு மருத்துவர்களை இழந்திருக்கிறோம். இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மக்களின் உயிர்ப்பிரச்சினை இது.**

**த.வெ.க. அரசு இதில் உரிய விளக்கத்தை நம் அரசு மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் அளித்தாக வேண்டும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## டாஸ்மாக் கடைகளை தனியாரிடம் ஒப்படைக்க த.வெ.க. அரசு முடிவு!

*சென்னை, ஜூலை 30 -*

*த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்தே, தமிழ்நாட்டில் மதுக்கடைகளை தனியார் மயமாக்குவதற்கும், வெளி மாநிலங்களில் இருந்து மதுவை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கும் ஒரு லாபி தீவிரமாக முயன்று வருவதாக ஏற்கனவே குற்றச்சாட்டு உள்ளது.*

*இந்நிலையில், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 4 ஆயிரத்து 48 மதுக்கடைகளில் முதற்கட்டமாக நகரப்பகுதிகளில் உள்ள 2 ஆயிரத்து 500 மதுக்கடைகளை தனியார் மயமாக்க த.வெ.க. அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.*

*நேரடியாக கடைகளை நடத்துவதற்கு பதிலாகத் தனியார் உரிமையாளர்களிடம் இருந்து உரிமக் கட்டணம் வசூலிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*இதற்கான சட்ட திருத்த மசோதாவை வருகின்ற சட்டப்பேரவை கூட்டத் தொடரில் த.வெ.க. அரசு தாக்கல் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது.*

*மேலும் வெளி மாநிலங்களில் இருந்து மதுவை கொள்முதல் செய்து விற்பனை செய்யவும் த.வெ.க. அரசு முடிவு செய்துள்ளது.*

*தனியார் மதுக்கடைகள் திறக்க அனுமதிக்கப்பட்டால், சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் அதிகளவில் மதுவுக்கு அடிமையாவார்கள் என சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

## மேகதாது குறித்து ஒன்றிய அமைச்சரின் கருத்துக்கு

# த.வெ.க. அரசு உரிய பதிலடி கொடுக்க வேண்டும்!

## காட்பாடியில் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

**வேலூர், ஜூலை 30 -**

**தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் காட்பாடியில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு; -**

**கேள்வி:** *மேகதாதுவில் கர்நாடகா அரசு அணை கட்டுவது குறித்து மாநிலங்களவையில் அன்புமணி ராமதாஸ் எம்.பி., எழுதிய கேள்விக்கு ஒன்றிய ஜல் சக்தி இணை அமைச்சர் பூஷன் சவுத்ரி எழுத்துப்பூர்வமாக தெரிவித்திருந்த கருத்து குறித்து?*

### உச்சநீதிமன்றத் தீர்ப்பை மீறும் கர்நாடக அரசு!

**துரைமுருகன் :** அபத்தமான, ஒரு ஆபத்தான ஸ்டேட்மெண்ட்டை ஒன்றிய ஜல் சக்தி இணை அமைச்சர் கூறி இருக்கிறார்.

2018 தீர்ப்பில் தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி ஒப்புதலை பெற வேண்டிய அவசியம் இல்லை என குறிப்பிட்டுள்ளதாக கூறி இருக்கிறார். இது என்ன ஆபத்து என கேட்டீர்கள் என்றால்? உச்ச நீதிமன்ற தீர்ப்பில் அங்கேயோ, இங்கேயோ எல்லாம் கழித்து விட்டு ஒரு சின்ன தகவலை மட்டும் எடுத்துப் பேசியிருக்கிறார். ஒன்றிய அமைச்சருக்கு காவிரி விவகாரம் குறித்து அனைத்தும் தெரியாது என்று சொல்ல முடியாது. அவருக்கு ஆலோசனை சொல்ல நிறைய பேர் இருக்கிறார்கள். அவர் இவ்வளவு பெரிய தவறு செய்யக் கூடாது, (இதற்கு 2018 நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ள சிலவற்றை வாசித்துக் காட்டினார்).

தற்போது கர்நாடகா முன் வைக்கும் மேகதாது திட்டம் தீர்ப்பாயத்தின் தீர்ப்பையும், அதை உறுதிப்படுத்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பையும் மேலும் ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட காவிரி மேலாண்மை திட்டத்தையும் வெளிப்படையாக மீறுவதாகும் என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற தீர்ப்பையே மதிக்க வேண்டும். தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டிய நீரை தவிர மற்ற நீரை கர்நாடகா பயன்படுத்திக் கொள்ளலாம் என எங்கும் கூறவில்லை. இவ்வளவு தெளிவாக நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்படி இருந்தும் எப்படி ஒன்றிய இணை அமைச்சர் சொல்கிறார் என தெரியவில்லை.

ஒன்றிய அமைச்சர் இப்படி தவறான செய்தியை வெளியிடுவது வருத்தத்திற்குரிய விஷயம். இதற்கு இந்த அரசு உரிய பதிலடி கொடுக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்திற்கு இந்த விவகாரத்தை அரசு கொண்டு செல்ல வேண்டும்.



### பெங்களூரு போகும் முதல்வர் டெல்லிக்குத்தானே போக வேண்டும்!

**கேள்வி :** *தமிழ்நாடு முதல்வர் பிரதமருக்கு கடிதம் எழுதி உள்ளாரே?.*

**துரைமுருகன் :** கடிதம் எழுதுவதை விட்டுவிட்டு, பெங்களூருக்கு போகும் முதல்வர் டெல்லிக்கு போக வேண்டியது தானே. இதில் கர்நாடக செய்யும் எல்லா தில்லுமுல்லுகளும் எனக்கு தெரியும். கர்நாடகா போய் பேசுவது மிகப்பெரிய ஆபத்து. இப்போது உள்ள முதலமைச்சர் நான் ஒன்றிய அரசோடு ஒத்துப் போகிறேன் என்று சொல்கிறார். அப்படி சொல்பவர் இதை செய்தால் என்ன? தமிழ்நாடு இப்போது பாலைவனமாக ஆகி வருகிறது. ஒட்டு மொத்த கட்சிகள் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும்.

**கேள்வி :** *காவிரி மேலாண்மை கூட்டுக் குழுவின் 139 வது கூட்டத்தில் 15 நாட்களுக்கு தமிழ்நாட்டிற்கு 3,500 கன அடி திறக்க வேண்டும் எனக் கூறியிருந்த போதிலும் முதல்வருடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என கர்நாடகா நீர்வளத் துறை அமைச்சர் கூறி இருந்தது குறித்து?.*

**துரைமுருகன் :** இப்போது திறந்து என்ன பயன். குருவை அனைத்தும் காய்ந்து போய்விட்டது. முதல்வர் என்ன பண்ண போகிறார் என தெரியவில்லை. இந்த ஸ்டேட்மெண்டை பார்த்த பிறகு எனது ரத்தம் கொதித்து போய்விட்டது. மியூச்சுவல் அக்ரிமெண்ட் கிடையாது என சொல்கிறார்களே என ஆதங்கம். இந்த அரசு இந்த நேரம் துடிச்சி இருக்கணும், தளபதியா இருந்திருந்தால் இந்த நேரம் என்னை டெல்லிக்கு விரட்டி இருப்பார். என்னை தூங்க விட்டு இருக்க மாட்டார். ஒன்றிய அமைச்சர் கொடுத்த ஸ்டேட்மென்டை தமிழ்நாடு அரசு மறுக்க வேண்டும். நீதிமன்ற உத்தரவை கொண்டு போய் பிரிவிலேஜ் போட வேண்டும். உண்மையை மறைக்கிறார் என பிரிவிலேஜ் போட்டு இருக்க வேண்டும்.

### தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை!

**கேள்வி :** *கர்நாடக தேர்தலை முன்வைத்து ஒன்றிய அரசு இதற்கு இதை தெரிவிக்கிறதா?.*

**துரைமுருகன் :** மக்களின் வாழ்வாதார பிரச்சினையில் எந்த கட்சியும் போக்கு காட்டக் கூடாது. மக்கள் வயிற்று பிரச்சினை இது.

**கேள்வி :** *மூத்தவர்களிடம் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் கூறி இருந்தாரே?.*

**துரைமுருகன் :** நான் ஒரு சாமானியன். அதுவும் தீய சக்தி கூட்டத்தின் பொதுச்செயலாளர் நான். என்னை போய் அவர் கூப்பிடுவாரா?

**கேள்வி :** *மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ் தாய் வாழ்த்து 3வது இடத்திற்கு தள்ளப்பட்டது குறித்து?.*

**துரைமுருகன்:** இதைவிட கேவலம் கிடையாது. இதற்கு தமிழன் தலை குனிய வேண்டும். தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே கருப்பு அத்தியாயம் இது.

ஒன்றிய அரசு இந்த நாட்டை கொஞ்சம் கொஞ்சமாக வேறு ஒரு பாதைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கிறது. இதை இந்த அரசு பயங்கரமாக எதிர்க்க வேண்டும். இந்த விவகாரத்தை கொஞ்சம் கூட விட்டு கொடுக்கக் கூடாது.

காவிரி விவகாரத்தை இந்த அரசு லேசாக எடுத்தால் தமிழ்நாட்டை கொன்று விடுவார்கள்.

**கேள்வி :** *காவிரி விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சியான நீங்கள் அனைத்து கட்சிகளையும் அழைத்து நடவடிக்கை எடுக்கப்பீர்களா?*

**துரைமுருகன் :** அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டியது ஆளும் கட்சி தான். நாங்கள் அல்ல. நாங்கள் என்ன செய்தாலும் ஒன்றிய அரசு ஆளுங்கட்சி என்ன செய்கிறது என்பதை தான் பார்ப்பார்களே தவிர மற்றவர்கள் செய்வதை கண்டுகொள்ள மாட்டார்கள்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கோரி ஜெயலலிதா 2 முறை உண்ணாவிரதம் இருந்தார். அந்த உணர்வாவது இவர்களுக்கு இருக்க வேண்டும்.

**கேள்வி :** *ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் தமிழக வெற்றிக்கழக எம்.எல்.ஏ.,வால் செய்தியாளர்கள் தாக்கப்பட்டது குறித்து?.*

**துரைமுருகன் :** முதல்வரே சொல்லி இருக்கிறார் “ஒரு தவறு செய்தாலும் அவன் என் கட்சியாக இருந்தாலும் 24 மணி நேரத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்று” ஆனால் செய்திருப்பது அவருடைய எம்.எல்.ஏ., ஆக அந்த வார்த்தைகளை முதல்வருக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

### குபேர மூலையில் முதல்வர் அமர்ந்தால்தான் சரியாக இருக்குமாம்!

**கேள்வி :** *முதல்வர் அலுவலக மாற்றம் குறித்து?.*

**துரைமுருகன் :** யாரோ ஜோசியக்காரன் சொன்னாராம். அக்னி மூலையில் இருப்பது ஓராண்டு, இரண்டு ஆண்டில் ஆட்சியில் இருக்க மாட்டீர்கள். அதற்கு உயரமான இடத்தில் போய் குபேர மூலையில் அமர்ந்தால் கரெக்டா இருப்பீர்கள் என கூறியதாக தெரிவிக்கிறார்கள்.

தற்போது வென்றவன் சொல்வதெல்லாம் வேதமாக இருக்கிறது.

இவ்வாறு கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் கூறினார்.